### சுருக்கம்

திட்டங்கள் – அனைத்து பேரூராட்சி அண்ணா மறுமலர்ச்சித் திட்டம் – 2007–2008 ஆம் ஆண்டு முதல் 2010–2011 வரையிலான நான்காண்டு காலத்தில் செயல்படுத்துதல் – ஆணைகள் வெளியிடப்பட்டது – திருத்தம் – வெளியிடப்படுகிறது.

---

**நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (பேரூ2) துறை**

14 OCT 2009
சென்னை - 108

அரசாணை(நிலை) எண். 199 19773 நாள்:14.10.2009

புரட்டாசி 28, திருவள்ளுவர் ஆண்டு 2040

படிக்கப்பட்டது:

1. அரசாணை (நிலை) எண்.94, நகராட்சி நிர்வாகம் (ம) குடிநீர் வழங்கல் (பேரூ.2) துறை, நாள் 06.07.2007.
2. அரசாணை (நிலை) எண்.20, நகராட்சி நிர்வாகம் (ம) குடிநீர் வழங்கல். (பேரூ.2) துறை, நாள் 13.02.2008.
3. அரசாணை (நிலை) எண்.163, நகராட்சி நிர்வாகம் (ம) குடிநீர் வழங்கல் (பேரூ.2) துறை, நாள் 02.09.2008.
4. நீலகிரி மாவட்ட ஆட்சித்தலைவரின் கடிதம் ந.மு.க. எண். 24548/08/ப3, நாள் 03.07.2009.
5. பேரூராட்சிகளின் இயக்குநர் கடித ந.க.எண்.12361/09/உ.3, நாள் 19.7.2009.

**ஆணை:**

பார்வை ஒன்றில் படிக்கப்பட்ட அரசாணையில் "அனைத்து பேரூராட்சி அண்ணா மறுமலர்ச்சி திட்டத்தினை "2007–2008–ஆம் ஆண்டு முதல் 2010–2011 வரையிலான நான்கு ஆண்டுகளில் செயல்படுத்திட, ஆண்டுக்கு 140 பேரூராட்சிகள் வீதம் தேர்வு செய்து ஆணையிடப்பட்டுள்ளது. அதன்படி நீலகிரி மாவட்டத்தில் 2007– 2008ம் ஆண்டுக்கு இத்திட்டத்தினை செயல்படுத்திட கீழ்க்கண்டுள்ள பேரூராட்சிகள் தேர்வு செய்து ஆணையிடப்பட்டது.

1. உலிக்கல்
2. ஓவேலி
3. அதிகரட்டி

2. மேற்கண்ட பேரூராட்சிகளில் ஓவேலி பேரூராட்சி, கூடலூர் ஜென்மம் நிலங்கள், பிரிவு 17–ன் கீழ் வருகின்றது என்றும், இங்கு நில தீர்வை செய்யப்படவில்லை என்றும், இது தொடர்பாக உச்சநீதி மன்றத்தின் மத்திய குழுவின் ஆணையின்படி இங்கு வளர்ச்சிப்பணிகள் மேற்கொள்ளப்பட வில்லை என்றும், மேலும் நடந்து வரும் நிலத்தீர்வை

பணி காலதாமதமாகும் என்பதால் பார்வை இரண்டில் படிக்கப்பட்ட அரசாணையில் 2007–08ம் ஆண்டில் "ஓவேலி" பேரூராட்சிக்குப் பதிலாக தேவர்சோலா பேரூராட்சியிலும் மற்றும் 2008–09ம் ஆண்டில் தேவர்சோலா என்பதற்கு பதிலாக ஓவேலி பேரூராட்சியிலும் அனைத்து பேரூராட்சி அண்ணா மறுமலர்ச்சி திட்டத்தினை செயல்படுத்திட திருத்தம் வெளியிடப்பட்டது.

3. பார்வை 3–ல் படிக்கப்பட்ட அரசாணையில் "ஓவேலி" பேரூராட்சி யில், திட்டப் பணிகள் மேற்கொள்ள இயலாத நிலை நீடித்திருப்பதால் 2008–2009ம் ஆண்டு பட்டியலில் உள்ள "ஓவேலி" பேரூராட்சிக்கு பதிலாக 2009–2010 ம் ஆண்டிற்கான பட்டியலில் முதலில் உள்ள "சோலூர்" பேரூராட்சி யினை" 2008–2009ம் ஆண்டிற்கான பட்டியலில் சேர்த்து பணிகள் மேற் கொள்ள சிறப்பினமாக கருதி அனுமதி வழங்கி திருத்தி ஆணை வெளியிடப்பட்டது.

4. பார்வை நான்கில் படிக்கப்பட்ட கடிதத்தில் நீலகிரி மாவட்ட ஆட்சித் தலைவர் 2009–2010–ஆம் ஆண்டில் நீலகிரி மாவட்டத்தில் அனைத்து பேரூராட்சி அண்ணா மறுமலர்ச்சி திட்டம் 3 பேரூராட்சிகளில் செயல்படுத்த இருந்த பட்டியலிலிருந்த "சோலூர்" பேரூராட்சியில் 2008–09.ஆம் ஆண்டில் திட்டம் மேற்கொள்ளப்பட்டதால் தற்போது 2 பேரூராட்சிகளில் மட்டுமே இத்திட்டம் செயல்படுத்தப்படுவதாகவும், எனவே 2010–2011.ஆம் ஆண்டிற் கான பட்டியலின் முதலாவது உள்ள "கோத்தகிரி" பேரூராட்சியினை 2009–2010.ஆம் ஆண்டிற்கான பட்டியலில் சேர்த்து திட்டப்பணிகளை மேற்கொள்ள அனுமதி வழங்குமாறும், அரசாணை (நிலை) எண்.94, ந.நி(ம)கு.வ துறை, நாள் 06.07.2007–ல், அனைத்து பேரூராட்சி அண்ணா மறுமலர்ச்சி திட்டம் ஆண்டிற்கு 140 பேரூராட்சிகளில் செயல்படுத்தப்படும் என ஆணையிடப்பட்டுள்ளது என்றும், 2009–2010.ஆம் ஆண்டில் நீலகிரி மாவட்டத்தில், 3 பேரூராட்சிகளுக்கு பதிலாக 2 பேரூராட்சிகளில் மட்டுமே இத்திட்டம் செயல்படுத்தப்படும் நிலை உள்ளதால் தற்போது 2009–2010.ஆம் ஆண்டில் மொத்தம் 139 பேரூராட்சிகளில் மட்டுமே இத்திட்டத்தினை மேற்கொள்ளப்பட வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது என்றும் இத்திட்டம் 2010–2011.ஆம் ஆண்டில் 141 பேரூராட்சிகளில் செயல்படுத்தப்படவுள்ளது என்றும் திட்டம் செயல்படுத்தப்பட வேண்டிய பேரூராட்சிகளில் ஒன்று நடப்பாண்டில் குறைவதை கருத்தில் கொண்டும், இதனை சிறப்பினமாகக் கருதியும் நீலகிரி மாவட்டத்தில், 2010–2011ம் ஆண்டிற்கான பட்டியலின் முதலில் உள்ள "கோத்தகிரி" பேரூராட்சியினை 2009–2010ம் ஆண்டிற்கான பட்டியலில் சேர்த்து திட்டப்பணிகளை செயல்படுத்திட திருத்தம் செய்யுமாறு பேரூராட்சிகளின் இயக்குநர் அரசினை கோரியுள்ளார்.

5. அரசாணை (நிலை) எண்.94, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள் 06.07.2007–ன்படி, அனைத்துப் பேரூராட்சி அண்ணா மறுமலர்ச்சி திட்டம் ஆண்டிற்கு 140 பேரூராட்சிகளில் செயல்படுத்தப்பட வேண்டியுள்ள நிலையில், 2009–2010.ஆம் ஆண்டில் நீலகிரி மாவட்டத்தில் 3 பேரூராட்சிகளுக்கு பதிலாக 2 பேரூராட்சிகளில் மட்டுமே செயல்படுத்தப் படும் நிலை உள்ளதால், மொத்தம் 139 பேரூராட்சிகளுக்கு மட்டுமே இத்திட்டத்தினை செயல்படுத்த வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. மேலும் 2010–2011ல் 141 பேரூராட்சிகளில் இத்திட்டம் செயல்படுத்தப்பட உள்ளது. எனவே, 2009–2010.ஆம் ஆண்டில் அனைத்துப் பேரூராட்சி அண்ணா மறுமலர்ச்சித் திட்டம் செயல்படுத்தப்பட வேண்டிய பேரூராட்சிகளில் ஒரு எண்ணிக்கை குறைவதை கருத்திற் கொண்டு இதனை சிறப்பினமாகக் கருதி 2010–2011.ஆம் ஆண்டிற்கான பட்டியலில் நீலகிரி மாவட்டத்தில் வரிசை எண்.62–ல் (இணைப்பு–IV) உள்ள கோத்தகிரி பேரூராட்சியினை 2009–2010.ஆம் ஆண்டிற்கான பட்டியலில் சேர்த்து, அரசாணை (நிலை) எண்.94, நகராட்சி

நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள் 06.07.2007ற்கு உரிய திருத்தம் செய்து ஆணை வழங்கிடக் கோரும் பேரூராட்சிகளின் இயக்குநரின் கருத்துருவை அரசு கவனமுடன் ஆய்வு செய்து அதற்கிணங்க பார்வை ஒன்றில் படிக்கப்பட்ட அரசாணை (நிலை) எண்.94, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள் 06.07.2007-க்கு கீழ்க்கண்ட திருத்தம் வெளியிடப்படுகிறது.

## திருத்தம்

**அரசாணை (நிலை) எண்.94, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள் 06.07.2007-ல் 2010-2011 ஆம் ஆண்டிற்கான பேரூராட்சிகளின் பட்டியலில் (இணைப்பு-IV) வரிசை எண்.62-ல் உள்ள "ஜோத்தகிரி " பேரூராட்சியினை, 2009-2010ஆம் ஆண்டிற்கான பேரூராட்சிகளின் பட்டியலில் (இணைப்பு III) சரியாக உள்ள வரிசை எண்.61-ல் சேர்த்து படிக்கவும்.**

(ஆளுநரின் ஆணைப்படி)

நிரஞ்சன்மார்டி
அரசு செயலாளர்.

பெறுநர்

பேரூராட்சிகளின் இயக்குநர், சென்னை – 108.
அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்கள்
அனைத்து மண்டல பேரூராட்சிகளின் உதவி இயக்குநர்கள்.
சிறப்பு ஆணையாளர் (ம) ஆணையாளர், கருவூலக் கணக்குத் துறை, சென்னை –35
மாநில தலைமை கணக்காயர் (A&E), சென்னை –18
மாநில கணக்காயர் (Audit), சென்னை –18
உள்துறை கணக்கு அலுவலர், சென்னை –9
சம்பளக் கணக்கு அலுவலர் (வடக்கு), சென்னை–9.
அனைத்து மாவட்ட கருவூல அலுவலர்கள்
நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை–5
மேலாண்மை இயக்குநர், தமிழ்நாடு குடிநீர் வழங்கல் வாரியம், சென்னை–5
ஆணையாளர், சென்னை மாநகராட்சி, சென்னை–3
மாண்புமிகு முதலமைச்சர் அலுவலகம், சென்னை–9
மாண்புமிகு துணை முதலமைச்சரின் முதுநிலை நேர்முக உதவியாளர், சென்னை–9
தலைமைச் செயலக அனைத்து துறைகள், சென்னை–9
செயலாளரின் தனிச் செயலர், ந.நி. (ம) கு.வ. துறை, சென்னை–9
நிதி (ந.நி.(ம)கு.வ/நிகு.IV/வ.செ./பொது.1/வ.செ.பொ.1/துறை, சென்னை–9
ந.நி.(ம)கு.வ.(பேரூ.1/அ.நு.2/வ.செ.(ம)பொது) துறை, சென்னை–9
இருப்பு கோப்பு / உதிரி நகல்.

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

பிரிவு அலுவலர்.